22/9/1951 M.V.M. BANGHLORE


# போர்வாள்

வாள்பதிகளுர் தன்னிச்சு 3

22-9-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன் B A.Hons

துணை ஆசிரியர் :
காஞ்சி கல்யாணசுந்தரம்

விலை 2 அணா


# இளஞ்செழியன்—சுந்தராம்பாள் திருமண விழா

★

## மாபெருங் கூட்டம்—மட்டற்ற உற்சாகம்

★

## அண்ணாவின் அறிவுரை-தளபதிகள் சொற்பொழிவு

★

12—9—51 புதன்கிழமை யன்று, சென்னை கோகலே மண்டபம், திராவிட இயக்கம் என்னும் சிறந்த குடும்பத்தின் திருமண மண்டபமாக மாறி, அந்த இயக்கத்தைச் சேர்ந்த "போர்வாள்" ஆசிரியரும், காஞ்சி மணிமொழியார் மகனுமான மா. இளஞ்செழியன்-காஞ்சிபுரம் நூல் வணிகர் திருவாளர் வே. குப்புசாமி அவர்களின் மகள் சுந்தராம்பாள் ஆகியோரின் வாழ்க்கை விழாவைத் தொடங்கிவைத்தது.

அன்று காலை 8-மணிக்குத் திருமணம் தொடக்கமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. என்றாலும் காலை 7-30 மணி முதலே திராவிட இயக்கத்தைச் சார்ந்த நம்பிகளும் நங்கைகளும் தாய்மார்களும் தந்தைமார்களும் கூட்டம் கூட்டமாகக் கோகலே

(4-ம் பக்கம் பார்க்க)



மா. இளஞ்செழியன் B. A. (Hons)—சுந்தராம்பாள்

இவர்கட்கு 12—9—51 காலை சென்னை கோகலே மண்டபத்தில் தோழர். இரா. நெடுஞ்செழியன், எம் ஏ., தலைமையில் திருமணம் நடைபெற்றது.

# உள்ளம் உடைந்த புரட்சிக்காரனுக்கு

**எழுதியவர் : வால்ட்விட்மன் தமிழாக்கம் : ‘மங்களப்பிரியன்’**

[காலத்தை மட்டும் படம் பிடித்துக் காட்டும் கவியல்ல வால்ட்விட்மன். அவன் காலத்தையே நிர்மாணிக்கும் கிருஷ்டி கர்த்தா. இலக்கண வரம்பைக் கடந்த அவன் கவிதையில் எளிமையும், கருத்தாழமும், ஆவேசமும் கலந்து உறவாடுகின்றன. கீழ்க்கண்ட கவிதை மக்கள் உரிமையில், அவன் கொண்டிருந்த தணியாத வேட்கையைப் புலப்படுத்துன்றது. உரிமைப் போரில் தோல்விகண்டு, உள்ளம் உடைந்துபோன புரட்சி வீரனுக்கு உணர்ச்சியூட்டும் உரையாகக் கவிதை அமைந்துள்ளது.]

“வீறுகொள்! என் சகோதரனே, சகோதரியே! தளராதே! என்ன நேர்ந்தாலும் சரி, உரிமை காக்கப்பட வேண்டும்; ஒரு முறை, இரு முறை இல்லை பன் முறை தோல்வி ஏற்படட்டுமே! மக்களின் அலட்சியம், நன்றி கெட்ட தன்மை, நம்பிக்கைத் துரோகம், அதிகாரத்தின் கோரைப் பற்கள், படைவீரர்கள், பீரங்கிகள், சட்டப் புத்தகங்கள் — இவைதான் என்ன செய்ய முடியும்?

“நாம் நம் உரிமையில் வைத்திருக்கும் நம்பிக்கை எல்லாக் கண்டங்களிலும், எல்லாத் தீவுகளிலும், கடல் கடந்த எல்லா நாடுகளிலும் என்றும் அழியாமல் காத்திருக்கும்; நமது லட்சியம் எவரையும் வாவென்று வருந்தி அழைக்கவில்லை, எதையும் யாருக்கும் கொடுப்பதாக வாக்குறுதி அளிக்கவில்லை; ஒளியிலும் அமைதியிலும் நிமதியாகக் கொலுவீற்றிருக்கிறது; அது சாதிக்கும் சக்தி பெற்றது; தோல்வி கண்டறியாதது.

“பயங்கரக் கூக்குரலோடு போர் நடந்து கொண்டிருக்கிறது; முன்னேறிச் செல்லுவதும் பின்வாங்கி ஓடுவதும் சதா நிகழ்ந்து கொண்டிருக்கின்றன; உரிமையின் விரோதி வெற்றி பெறுகிறான் — இல்லை வெற்றி பெற்றதாக நினைக்கிறான்!

“சிறைக்கோட்டங்கள், பலிபீடங்கள், காராக்கிருகங்கள், விலங்குகள், ஆள்கொல்லிகள், துப்பாக்கி குண்டுகள் அவைகள் கடமைகளைச் செய்கின்றன. பேர்பெற்ற வீரர்களும், பேர் ஊர் தெரியாத தீரர்களும் விண்ணுலகுக்கு விரைகின்றனர்!

“சிறந்த பேச்சாளர்களும் பேனா வீரர்களும் நாடுகடத்தப் படுகின்றனர் — வேற்று நாடுகளில் மனம்வெதும்பித் துடிக்கின்றனர். லட்சியம் தூங்க ஆரம்பிக்கிறது — உரத்துக் கூவிய குரல்கள் ஓய்ந்துபோகின்றன; அவை சிந்திய இரத்தம் அவைகளைப் பேசவிடாமல் அடைத்து விடுகின்றன. இளைஞர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுது, தலைகுனிகின்றனர் வெட்கத்தால்!

“இத்தனைக்கு மிடையே, உரிமை அது வசிக்கின்ற இடத்திலிருந்து வெளியேறுவதுமில்லை; உரிமையின் விரோதிகள் அந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ள முடிவதும் இல்லை!

“உரிமை ஒரு இடத்தைவிட்டு வெளியேறும்போது, அது முதலாவதாகவோ, இரண்டாவதாகவோ, அன்றி மூன்றாவதாகவோ வெளியேறுவதில்லை
இதர எல்லாம் வெளியேறு
வரை காத்திருந்து, கடைசிய
கத்தான் வெளியேறுகிறது!

“உலகத்தின் எந்தப் பகு
யில், மக்களின் நினைவிலிருந்
வீரர்களும் தியாகிகளும் மறை
கிறார்களோ, எந்தப் பகுதியி
ஆண், பெண்களின் உட
லிருந்து உயிரும், ஆத்மாவு
விடுதலை பெற்று வெளியே
கின்றனவோ, அப்பொழு
தான், அந்தப் பகுதியிலிருந்
உரிமை பலவந்தமாக வெளியே
றப்பட்டு, உரிமையின் விரோ
கள் அப்பிரதேசத்தை ஆக்கி
மிக்கின்றனர்!

“ஆகவே, புரட்சிக்கார சகே
தரனே, சகோதரியே, தைரிய
கொள்! எல்லாம் ஓய்ந்
போகும் வரை நீயும் ஓய்வடை
யாதே! நீ எதற்காக இருக்கி
றாய் என்று எனக்குத் தெரி
வில்லை; (நான் எதற்காக இரு
கிறேன் என்றோ, எப்பொருளு
எதற்காக இருக்கிறது என்ற
எனக்குத் தெரியாது) ஆனா
தோற்றோடுகின்றபோதும், வ
மையை அனுபவிக்கும்போதும்
சிறைச்சாலையில் இருக்கு
போதும் கூட அதைப் பற்
தான் நான் ஆராய்ந்து கொண்
டிருக்கிறேன்!

“தோல்வி, துயரம், எழ்மை
சிறைச்சாலை — இவைகளும்மிக
சிறந்த விஷயங்களாகத்தா
எனக்குப் படுகின்றன. வெற்
மிகப் பெரிது என்று நா
எண்ணவில்லையா? ஆம் அ
மிகப் பெரியதுதான் — ஆனா
தோல்வி தவிர்க்க முடியா
போது, தோல்வியும் மிகப் பெ
தாகவே எனக்குப் படுகிறது”

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்பதாசன் வாழ்க! ஓவியக் கலை வாழ்க! முல்லை நாடு வாழ்க!..." என முழக்கமிட்டுக்கொண்டிருந்தனர். பல்லக்கின் மீது மலர்மாரி பொழிந்தனர்! நான் வெகு தூரம் செல்லும்வரை பல்லக்கின் திரையை விலக்கி என் ஆசை மனைவியையும் அன்பு நண்பரையும் பார்த்துக்கொண்டிருந்தேன். என் கண்களில் கலங்கிய கண்ணீர் அவர்களை என் பார்வைக்கு மறைத்தது!

பெரும் பெரும் பட்டினங்கள்! பலப்பல பூஞ்சோலைகள்! பச்சை வயல் வெளிகள்! முல்லை நாட்டின் மாண்பு மிகுந்த மரங்கள் அடர்ந்து வளர்ந்திருக்கும் காடுகள்! காட்டு மிருகங்களின் கூச்சல்! இன்னிசைப் பறவைகளின் இனிய கானம்! மலைச் சாரல்களிலே மேயும் மாடுகள்! அவை தண்ணீர் குடிக்கும் காட்சி! மாடுமேய்க்கும் பையனின் புல்லாங்குழலிசை! வெய்யோனின் கொடிய ஆட்சி! சந்திரனின் தண்ணொளிப் பாய்ச்சல்! தென்றலின் இனிய ஸ்பரிசம்!...

இவையனைத்தையும் கண்டு—கேட்டு — உணர்ந்துகொண்டே சின்னாட்கள் பல்லக்கில் சென்றுகொண்டிருந்தேன்.

"அத்தான்! உலகம் எப்பொழுதும் வாயைத் திறந்துகொண்டேயிருக்கும்! சிறிது நாட்களுக்கு வசைச் சொற்களும் சிறிது நாட்களுக்கு வாழ்த்துச் சொற்களும் அதனின்று வெளிவரும்! இது நீங்களறியாததா?......" — என் அழகு ராணி என் கண் முன்பு தோன்றிக்கொண்டேயிருந்தாள்.

"இன்பதாசா! நீ என் தாசனா அல்லது இன்பத்தின் தாசனா?... இன்பா! நான் உன் ஓவியதாசன்!..."—என் ஆத்ம நண்பரான அரசர் அடிக்கடி என் முன்னே காட்சியளித்துக்கொண்டிருந்தார்.

அவர்களிருவரும் என் கண்முன் தோன்றி என் உள்ளத்திலே வருத்தத்தையும் ஏக்கத்தையும் உண்டாக்கிக்கொண்டிருந்தார்கள்.

நான் பாலைநாட்டை யடைந்தேன்! பெருத்த வரவேற்பைப் பெற்றேன். அந்நாட்டுப் புரவலர் பரந்தாமன் என்னை வரவேற்று உபசரித்து அவைக்கு அறிமுகப்படுத்திவைத்தார். நான் அப்பொழுது அடைந்த பூரிப்பிற்கும் பெருமைக்கும் அளவே கிடையாது!

பரிசின்பா! பாலைநாட்டுப் புரவலர் பரந்தாமனாரின் வேண்டுகோளுக்கு இணங்கி நான் ஓவியங்கள் தீட்ட ஆரம்பித்தேன்.

கதிரவன் காலையில் எழும் காட்சி! மாலையில் அவன் மறையும் காட்சி! பாங்கான பூங்காவனச் சித்திரம்! பலப்பலப் பூஞ்செடிகள்! வகைவகையான மரங்கள்! வாகான காடுகள்! குளங்கள்! கவின் மிகு அருவிகள்! காட்டாறுகள்! செழிப்பு கொழிக்கும் செந்நெல் வயல்கள்! வானைமுட்டும் வாகான மலைக்குன்றுகள்!....கொடியிடைக் காரிகைகள் குடங்களை யிடையிலேந்திக்கொண்டு குளக்கரைக்குக் குலுக்கு நடையுடன் செல்லும் காட்சி! அரும்பு மீசை இளைஞன் அமர்க்களமேகும் அழகு ஓவியம்! குரிசில் ஒருவன் குதிரைமீதேறி காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்து செல்லும் சித்திரம்! படைக்கூட்டங்கள் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொண்டு தூசித்துகளை யெழுப்பும் காட்சி! சமர்க்களம் சேனைகள் வடித்த செந்நீரால் போர்த்தப்பட்டிருக்கும் காட்சி! ஆண்மையோடு போரிட்டு விழுப்புண்கள் பலபட்டு வீரத்தை விட்டொழிக்காது, புறங்காட்டாது, பகைவரின் அம்புகளுக்கு அஞ்சாது மார்பைக் காட்டி மண்ணில் வீரர் பலர் வீழ்ந்து கிடக்கும் உணர்ச்சி ததும்பும் ஓவியம்! தோகையர் கூட்டம் தத்தம் கணவரைக் கட்டி முத்தமிட்டுப் புலம்பும் உருக்கமான காட்சி! கொக்குக் கூந்தல் குரங்குமேனி நரை மூதாட்டிகள் தங்கள் வீர மைந்தர்களின் பிணங்களை முத்தமிட்டு ஒப்பாரிவைக்கும் பரிதாபச் சித்திரம்!......அரசன் அரியணையிலமர்ந்துகொண்டு அவை கூட்டிப் பேசும் இன்பக் காட்சி! காதலரிருவர் ஓர் குளக்கரையில் கொஞ்சி மகிழும் கவின் மிகு காட்சி! புலவரொருவர் பாடலெழுதும் படம்! ஓவியன் ஒருவன் சித்திரம் தீட்டும் சீரிய சித்திரம்!...

இப்படிப் பல காட்சிகளை— இயற்கையழகுகளை ஓவியங்களாகத் தீட்டினேன்! நானே வியந்தேன்! மூன்றுமாத காலத்தில் இவ்வளவு அதிகமான ஓவியங்களைத் தீட்டினது எனக்கு அதிக வியப்பாகத்தானிருந்தது! என் வேணியையும் வேந்தரையும் காணத் துடித்ததால்தானோ ஏனோ அவ்வளவு ஓவியங்களையும் அக்குறுகிய காலத்தில் ஒழுங்காகவும் அழகாகவும் தீட்டி முடித்தேன்!...

மகிழ்ச்சி! மட்டற்ற மகிழ்ச்சி! நீங்காத மகிழ்ச்சி!...ஒரே மகிழ்ச்சியாக இருந்தது எனக்கு! ஆம் இப்பொழுது மகிழ்ச்சி என்னை முற்றுகையிட்டது!

என் அழகு ஓவியங்களைக் காணும்பொழுது மகிழ்ச்சி! என் ஓவியங்களைப் பாலைநாட்டுப் புரவலரும் மக்களும் புகழ்வதைக் காணும்பொழுது மகிழ்ச்சி! நான் என் வேணியை அணைத்துக்கொள்ளச் சிறிது நாட்கள்தானிருக்கின்றன என்பதை யெண்ணும்பொழுது எல்லையில்லா மகிழ்ச்சி! என் அன்பு நண்பரின் அருள்வழியும் முகத்தைச் சிறிது நாட்களில் கண்டு களிக்கப்போவதை எண்ணும்பொழுது அளவில்லாத மகிழ்ச்சி! அதுமட்டுமல்ல! எல்லாவற்றிற்கும் அதிகமான ஒரு மகிழ்ச்சி என்னைப் பற்றிக்கொண்டதற்குக் காரணம் ஓர் நற்செய்தி எனக்குக் கிடைத்ததுதான்! ஆம். நான் ஒரு ஆண்குழந்தைக்குத் தந்தையாகிவிட்டேன்!....மகிழ்ச்சி! மகிழ்ச்சி! மகிழ்ச்சி!!...

(தொடரும்)

## திராவிட முன்னேற்றக் கழகம்

### சென்னை முத்தியாலுப் பேட்டைக் கிளை

இக் கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம், 24-9-51 திங்கள் மாலை 6 மணிக்குச் சென்னை பவழக்காரத் தெரு "போர்வாள்" அலுவலகத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது வரவேண்டுகிறேன்.

செயலாளர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)


மண்டபத்தை நோக்கி வந்து குழுமலாயினர். இளஞ்செழியன்—சுந்தராம்பாள் திருமண விழாவை, இயக்கத் தோழர்கள் ஒவ்வொருவரும் தத்தம் குடும்பத்தைச் சேர்ந்த சொந்தத் திருமணமாகவே கருதி உள்ளம் பூரித்து உவகை பொங்க நடமாடிக் கொண்டிருந்தனர் அன்று. உண்மைதானே அவர்கள் கருத்தும்! இளஞ்செழியனும், சுந்தராம்பாளும், அன்றங்குக் கூடிய ஆயிரமாயிரம் திராவிடரும், திராவிடரியக்கம் என்னும் ஓரே குடும்பத்தைச் சேர்ந்த வெவ்வேறு உறுப்பினர்கள் தானே!

மணி ஒன்பது அடித்தது. மண்டபத்தில் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது. மேடை மீது, இயக்கத் தளபதிகளும் சொற்போர் மன்னர்களும் எழுத்துத்துறை வல்லுநர்களும் கழகக் காளைகளும் அன்பு ததும்பும் தோற்றத்துடன் அழகுற வீற்றிருந்தனர். இளஞ்செழியன்—சுந்தராம்பாள் தம்பதிகள் மண்டபத்துள் நுழைந்தபோது, மக்கள் எழுப்பிய கையொலி, அவர்கள் உள்ளத்தில் நடமாடிய இன்ப ஒலியின் தன்மையை எடுத்துக்காட்டும் சிறந்த அறிகுறியாக விளங்கிற்று.

முதலில், "போர்வாள்" ஆசிரியர் காஞ்சி மணிமொழியார் அவர்கள், வந்திருந்த மக்கள் அனைவரையும் மனமார வரவேற்றுப் பேசி, சொல்லின் செல்வர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களைத் திருமணத்திற்குத் தலைமை தாங்கி நடத்தும்படி வேண்டிக் கொண்டார். அதற்கிணங்க நெடுஞ்செழியன் அவர்கள் திருமண விழாவின் தலைவராக அமர்ந்து, சீர்திருத்தத் திருமணத்தின் சீர்மிகு இயல்புகளைத் தம் செந்தேன் போன்ற நடையாலே செவ்வையுற விளக்கிச் சொற்பொழிவாற்றிவிட்டு, மணமக்களை வாழ்க்கை ஒப்பந்தம் படித்து மாலை மாற்றிக்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார் அவை நிகழ்ந்த பின்னர், தோழியர்கள் இரதி ராணி பாலசுப்பிரமணியம், வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், டாக்டர் தர்மாம்பாள், "பிரசண்ட விகடன்" துணையாசிரியர் அ. இளங்கோவன், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எம்.ஏ., எல்.டி., காஞ்சி கல்யாணசுந்தரம், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், முன்னணி வீரர் மு. கருணாநிதி ஆகியோர், அர்த்தமற்ற சடங்குகள் எதுவும் இன்றி நடைபெற்ற இத் திருமணத்தின் நல்லியல்புகளை நன்கு விளக்கியும் திருமணத் தம்பதிகளின் பண்பு நலங்களைப் பாராட்டியும் விரிவுரை யாற்றினர். பகல் 12-மணி அளவில், தலைவர் நெடுஞ்செழியன் அவர்களின் தமிழ்த் தென்றல் எனத்தகும் முடிவுரைச் சொற்பொழிவோடும், இசை முரசு தோழர் நாகூர் அனிபாவின் இன்னிசை முழக்கத்தோடும் திருமண நிகழ்ச்சி இனிது முடிவுற்றது.

சென்னை மாவட்டம் 9, 10, 11, 12-வது வட்ட திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள், சென்னைத் தொழிலமைக் கழகம் ஆகிய பல்வேறு கழகங்களின் சார்பில், காலையில் சீர்திருத்தத் திருமணம் புரிந்துகொண்ட இளஞ்செழியன் சுந்தராம்பாள் தம்பதிகளைப் பாராட்டி, மாலை 4-30 மணிக்கு அதே இடத்தில் மாபெரும் கூட்டம் ஒன்றும், சிறந்த இன்னிசை விருந்துகள் இரண்டும் அளிக்கப்பட்டன.

முதலில், இசைச்செல்வி ஜி. கஸ்தூரி அம்மையார், இன்னிசை வேந்தர் புதுவை ஆ. விநாயகனார் ஆகியோர் முறையே மாலை 4-30-மணி முதல் 5-30 வரையிலும், 5-30 முதல்



மா. இளஞ்செழியன்—சுந்தராம்பாள் திருமணத்தில் தலைமை வகித்த தோழர். இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., சீர்திருத்தத் திருமணம்பற்றி விளக்குகிறார்.

6-30 வரையிலும் தமிழிசைதன்னை இன்பம் கமழக் கமழ மக்கட்கெல்லாம் வாரி வழங்கினர்.

6-30 மணிக்குப் பாராட்டுக் கூட்டம் தொடக்கமாயிற்று. தோழர் வி. சி. ஜெயராமன் அவர்கள் முன்மொழிந்ததற்கேற்ப, இளைஞரேறு க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி, மணமக்களைப் பாராட்டிச் சிறந்தோர் சொற்பொழிவாற்றினர். அவர், தம் கருத்துரையைத் தந்துகொண்டிருந்த நேரத்தில், அறிஞர் அண்ணா அவர்கள் மண்டபத்தில் நுழைய, மக்கள் வெள்ளம் கடல் அலைபோலக் கைதட்டி ஆநந்த ஆரவாரம் செய்யலாயிற்று.

தலைவர் அன்பழகனின் சொற்பொழிவுக்குப் பிறகு, புலவர் தலைவர் மயிலை சிவமுத்து தோழர்கள் கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன் ஆகியோர் தம்தம் சொல்விருந்தை மக்கட்கு வழங்கினர்.

இறுதியில், அண்ணா அவர்கள், சீர்திருத்தத் திருமணத்தின் சிறந்த தன்மையினை விளக்கியும், இளஞ்செழியனுக் கும் தனக்கும் ஏற்பட்டுள்ள தொடர்பினைச் சுட்டிக் காட்டியும், மணமக்களுக்கு நல்ல அறிவுரை வழங்கும் அரியதோர் சொற்பொழி வாற்றினர்.


மணமக்களுக்குப் பல்வேறு கழகங்களின் சார்பில் வாழ்த்திதழ்கள் பற்பல வாசித்தளிக்கப்பட்டு, விழா, இரவு 8 மணிக்கு இனிது முடிவுற்றது.

விழா நிகழ்ச்சிகளில் வந்து கலந்துகொண்ட பல்லாயிரக் கணக்கான மக்களில் குறிப்பிடத்தக்கவர்களில் சிலர் வருமாறு:—

அறிஞர் அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், மு. கருணாநிதி, பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை எம்.ஏ. எல்.டி, காஞ்சி கல்யாணசுந்தரம், சத்தியவாணிமுத்து தம்பதிகள், இந்திராணி பாலசுப்பிரமணியம் தம்பதிகள், தாமரைக்கண்ணி அம்மையார், டாக்டர் தர்மாம்பாள், அருண்மொழி பி.ஓ.எல், பூங்கோதை, எயினிலாரன்ஸ், ராஜலட்சுமி, செல்வக்கண்ணம்மாள், அலர்மேலு அப்பாதுரை, வெற்றிச்செல்வி அன்பழகன், புலவர் மயிலை சிவமுத்து, இராதாமணாளன், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், இராம அரங்கண்ணல், ஈழத்தடிகள் பி.ஏ, ''மாலைமணி' டி. எம். பார்த்தசாரதி, சென்னை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர்கள்—ஏ. கே. சாமி, கே. எம். கண்ணபிரான், ஷை கழகப் பொருளாளர் சி. வி. ராஜன், சி. டி. டி. அரசு, ஏ. எஸ் இராமன், நுங்கம்பாக்கம் பாலசுந்தரம், 'தீ' ஆசிரியர் பத்மன் செல்லப்பன், திருவொற்றியூர் டி. சண்முகம், முன்னாள் அமைச்சர் எஸ் முத்தையா, காஞ்சி சி. வி. எம். அண்ணாமலை, திருக்கழுக்குன்றம் க. சி. துரைசாமி, சென்னை பச்சையப்

(12-ம் பக்கம் பார்க்க)

## மா. இளஞ்செழியன்—சுந்தராம்பாள் பாராட்டுக் கூட்டம்



தோழர் க. அன்பழகன் எம்.ஏ., அவர்கள் பாராட்டுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பல கழகங்களின் சார்பில் வந்த வாழ்த்துப் பத்திரங்களை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

# விசித்திர சித்தர்

(காஞ்சி. கல்யாணசுந்தரன்)

நமது பிரதமர் குமாரசாமி ராஜா இருக்கிறாரே, அவர் ஓர் விசித்திரமான மனிதர். அவர் சட்ட சபைக்குச் செல்லுவார்; ஆனால், வாய்திறக்கமாட்டார் அங்கு. அவர், வெளியில்தான் தனது சர்க்காரின் உள்ளக் கிடக்கைகளை விரிவாகப் பேசுவார். எதிர்ப்பில்லாத இடத்தில்தான் அவர் எக்காள மிடுவாரே யன்றி, துளி எதிர்ப்பிருந்தாலும் அவர் பேசாமடந்தையாகி விடுவார்.

சென்ற வாரத்தில் திருச்சியில் ஓர் பொதுக் கூட்டத்தில் பேசும் வாய்ப்பு குமாரசாமியாருக்குக் கிடைத்தது அப்பொழுது, ஏதேதோ பொருள்பற்றிப் பேசியிருக்கிறார். அவைகளில் எல்லாம் முக்கியமானது உணவைப்பற்றியதாகும்.

இரண்டு அவுன்ஸ் அரிசியைப் பெற்றுக் கொண்டு கிராமமக்கள் என்ன செய்வார்கள் என்று பிரதமர், கேட்கிறார். அரிசியை அளந்து கொடுக்கும் அதிகாரம் அக்கூட்டத்தில் இருந்த மக்களிடம் இல்லை. இயற்கையாக அவர்களிடம் இருந்த அப்பொறுப்பை குமாரசாமியாரின் கட்சியிடம் தாரைவார்த்துக் கொடுத்து நான்காண்டுக்கு அதிகமாகிறது. பாத்திரம் அறியாமல் பிச்சையிட்டு விட்டு, இன்று மீளும் மார்க்கம் தெரியாமல் கண்களைக் கசக்கிக் கொண்டு காலம் கழித்து வருகிறார்கள் அவர்கள். அவர்களுடைய உள்ளம் புண்பட்டுப் போய் இருக்கிறது. இந்நிலையில் புண்ணை ஆற்ற வேண்டிய புத்திமான், கூரிய கோல் பாய்ச்சுகிறார்!

புண் தானாக உண்டாகவில்லை. அதாவது, கிராமமக்கள் தங்களுக்குத் தினசரி 'இரண்டு அவுன்ஸ் அரிசி கிடைத்தால் போதும்' என்று தாங்களாக முன் வந்து ஏற்றுக் கொள்ளவில்லை — ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அவர்களுக்கு அந்த அளவு போதுமா போதாதா என்று அவர்கள் கருத்தைக் கேட்காமலே, அவர்களுடைய தேவைக்கும் விருப்பத்துக்கும் மாறாக, அவர்களால் நல்லெண்ணத்தோடு தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு, அவர்கள் மீது குமாரசாமியாரின் கும்பல், பலவந்தமாகப் புகுத்தியிருக்கிறது இரண்டு அவுன்ஸ் அரிசி ஏற்பாட்டை.

வேண்டுமென்றே, தாங்களே புகுத்திய இரண்டு அவுன்ஸ் பங்கீட்டை, ஏதோ கிராமமக்களே மனமுவந்து ஏற்றுக்கொண்டது போலக் குமாரசாமியார் பேசுகிறாரே, இது அடுக்குமா? புண், கிராமமக்களாகத் தேடிக் கொண்டது அல்ல கிராமமக்களின் ஆதரவையும் அன்பையும் பெற்று, அதிகாரத்தில் வீற்றிருக்கும் காங்கிரஸ் அசகாய சூரர்களுடைய சிறுமதியினால் உருவாக்கப்பட்டுள்ளது அப்புண்!

புண்ணை உண்டாக்கி விட்டு, புண் ஏற்பட்டதற்குப் பொது மக்கள்தான் பொறுப்பாளிகள் என்ற தோரணையில் பேசுகிறார் பிரதமர், அவர் புத்தியை என் செய்வது? அவருடைய போக்கைத்தான் பொது மக்கள் எத்துடன் ஒப்பிடுவது?

கிராம மக்களுக்குத் தினசரி
தலைக்கு இரண்டு அவுன்ஸ்
அரிசியாவது தவறாமல் கொடுக்
கப்பட்டுவருகிறதா என்றால்,
அதுவும் கிடையாது. கொடுப்
பது குறைவானதாக இருந்தா
லும், சட்டப்படி தினம் தினம்
கொடுத்தாகவேண்டும் என்ற
கட்டாயம் ஒன்றும் கிடையாது
குமாரசாமியாரின் குழுவிற்கு!
ஏதோ காங்கிரஸ் மந்திரிகள்,
தங்களைப்பிச்சை இடுகிற பெரிய
மனிதர்களைப் போலவும், கிராம
மக்களைப்பிச்சை ஏற்று உண்ணு
கிற இழிகுல மக்களைப் போல
வும், கருதிக்கொண்டு உணவுப்
பங்கீட்டை அமுல் நடத்தி
றார்கள் ஆளவந்தார்கள் என்
பதுதான் உண்மையாகும். காங்
கிரஸ் கனங்களின் உணவுப் பங்
கீடு கொள்கையில், மனித உண
ர்ச்சியும் இல்லை, மக்களாட்சி
மாட்சியும் இல்லை, பொறுப்
பறிந்து நடக்கும் போக்கும்
இல்லை, நிர்வாக ஆற்றலும்
இல்லை. அதில் இருப்பதெல்
லாம், பொதுமக்கள் என்றால்
புழுக்கள் என்று மதித்து நடக்
கும் அலட்சியம், ஆணவம்,
அதிகார வெறி ஆகிய மூன்றும்
தான்.

பொறுப்பான பதவிகளில்
இருக்கத் தகுதியற்றவர்கள்
காங்கிரஸ் மந்திரிகள் என்பதை
உணவுப் பங்கீடு விஷயத்தில் தங்
களுக்குள்ள பொறுப்பை உத
றித் தள்ளி நடந்துகொள்வதி
லிருந்தே தீர்மானித்துக்கொள்
ளலாம். கிராம மக்களின் நம்
பிக்கையை, அவர்கள் இழந்து
விட்டார்கள். நிற்க.

அதே கூட்டத்தில், அதே
நேரத்தில், வேறு ஒரு விசித்திர

மான கருத்தையும் வெளியிட்டு இருக்கிறார் குமாரசாமியார்.

அவர் கேட்கிறார் — இல்லை— பிதற்றுகிறார், 'நகரத்தில் உள்ள மக்கள் உணவுதானியம் எதையும் உற்பத்தி செய்யாமல் இருக்கின்ற பொழுது, அரிசி கேட்க அவர்களுக்கு அருகதை ஏது?' என்று கேட்கிறார் குமாரசாமியார் தெருக்கூத்தில் வரும் கட்டியக்காரனையும் தோற்கடித்துவிடுகிறார் இராஜபாளையத்தார். அரிசியை உற்பத்தி செய்கிறவர்கள்தான் அரிசி உண்ண உரிமை கொண்டவர்கள்; மற்றவர்களுக்கு அவ்வுரிமை கிடையாது என்ற ஓர் புதிய சித்தாந்தத்தை உலகுக்குத் திருவாய் மலர்ந்திருக்கிறார் முதல் அமைச்சர். இச் சித்தாந்தத்தை அளவுகோலாகக் கொண்டு, மற்ற எல்லா விவகாரங்களையும் அளந்து பார்ப்போமேயானால், ஒவ்வொரு விஷயத்திலும் எத்தகைய முடிவு ஏற்படும்? பிரதமரின் புதுக்கருத்து, நம்மை எல்லாம் எங்கே கொண்டு போய்விடும் என்பதைச் சிறிது ஆராய்வோம்.

பூமிக்கு அடியில் மண்ணுடன கலந்துகிடக்கும் இரும்பைத் தோண்டி எடுத்து, மண்ணை அப்புறப்படுத்தி, இரும்பை மட்டும் பற்பல பயன்படும் பொருட்களாக உருவாக்கித்தரும் தொழிலாளர்கள்தான, இரும்புப் பொருட்களை உபயோகிக்க உரிமை கொண்டவர்கள்! உழவுக்குத் தேவையான மண்வெட்டி, கலப்பை ஏர் ஆகிய எந்த இரும்புப் பொருளையும் பெற எந்த உழவனுக்கும் உரிமை கிடையாது. காரணம், குமாரசாமியாரின் கூற்றுப்படி, உழவர்கள் உணவுப் பொருட்களைத்தான் உற்பத்தி செய்கிறார்களேயன்றி, இரும்புச் சுரங்கத்தில் தொழில் செய்யவும் இல்லை—இரும்பு ஆலையில் பாடுபடவும் இல்லை. இந்நிலையில் எப்படி உழவர்கள் இரும்பினால் ஆன கருவிகளுக்கு உரிமை கொண்டாடுவது?

நெசவாளிகள்தான் ஆடை அணிந்து கொள்ள உரிமை உடையவர்கள், மற்றவர்களுக்கு அந்த உரிமை கிடையாது என்று தீர்மானிக்கவேண்டும், குமாரசாமியாரின் கட்டளைப்படி!

இப்படி ஒவ்வொரு விஷயத்தையும் குமாரசாமியாரின் கோணல் கருத்தின்படி தீர்மானிப்பதானால், உழவர்களைத் தவிர வேறு எவரும் உண்ணக் கூடாது, நெசவாளிகளைத் தவிர வேறு எவரும் ஆடை அணியக் கூடாது, வீடு கட்டும் கொல்லத்துக்காரர்களைத் தவிர வேறு எவரும் வீடுகளில் வாசம் செய்யக் கூடாது, மோட்டார் செய்கிறவர்களைத் தவிர வேறு எவரும் மோட்டாரில் ஏறிச் செல்லக் கூடாது, என்றெல்லாம் முடிவிற்கு வந்தாக வேண்டும் ஒவ்வொருவரும்.

விசித்திர சித்தரின் விபரீத சித்தாந்தம்என்றுதான்கொள்ள வேண்டும் குமாரசாமியாரின் கோமாளிக் கோட்பாட்டை!

இந்த மந்திரிகள் எதை உற்பத்தி செய்கிறார்கள்? நிர்வாக ஊழல், கள்ள மார்க்கெட், பெர்மிட்போம், உல்லாசப்பிரயாணம் ஆகியவைகள்தானே, இவர்கள் தினம் தினம் உற்பத்தி செய்து கொண்டு இருப்பது? இவர்களுக்கு அலங்கார ஆடை ஏன்? அணிமணிகள் ஏன்? மாளிகை ஏறும் மோட்டார் ஏன்? இவைகளில் எதுவும், இவர்களின் திருக்கரங்களால் உருவானதல்லவே?

கிச்சிலி சம்பா சோற்றை இவர்கள், தங்கள் விரல்களாலும் தொடலாமா? சோளக் கஞ்சி கூட குடிக்க இவர்களுக்கு உரிமை இல்லாமல் இருக்கும் பொழுது, இவர்கள் அனைவரும் அஜீரணத்துக்கு மருந்து தேடித் திரியும் அளவிற்கு விலாப் புடைக்க விருந்து உண்ணுகிறார்களே, ஆகுமா இது?

கிராம மக்கள் வேறு, நகர மக்கள் வேறு என்று பாகுபாடு படுத்தி முன்னவர்களை பங்கீட்டில் சேர்க்காமலும், பின்னவர்களைக் கட்டாயப் பங்கீட்டில் சேர்த்தும், ஏதோ தயாதாட்சண்யமாகக் கிராம மக்களுக்கு தினசரி இரண்டு அவுன்ஸ் அரிசி கொடுத்தும் கொடுக்காமலும் காலம் கழித்து வரும் ஆளவந்தார்களின் முதல்வர், கிராமமக்களின் வெந்த உள்ளத்திலே முதல் முதலாக வேலைப்பாய்ச்சினார். இரண்டாவதாக, உணவு தானியம் உற்பத்திச் செய்யாதவர்கள் உண்ண உரிமையற்றவர்கள் என்ற கோமாளிக் கருத்தைக் கொட்டிக் குழப்பினார். மூன்றாவதாக, குமாரசாமியார், பத்திரிகைகள் மீது அபாண்டமாகப் பொய்க் குற்றம் சாட்டுகிறார்.

'கிராம மக்களுக்கும் நகர மக்களுக்கும் ஒரே மாதிரியான உணவுப் பங்கீடு முறை இருந்தாகவேண்டும் என்று எந்தப் பத்திரிகையும் வற்புறுத்திக்கூறவில்லை' என்று பித்தலாட்டம் பேசுகிறார். என்ன இருந்தாலும், இராஜபாளையத்தார், காங்கிரஸ் குட்டையில் ஊறிய மட்டை அல்லவா? அவரும் சத்திய சோதனை செய்துதானே ஆகவேண்டும்?

சட்டப்படி அமுல் நடத்தப்பட்டு வந்த கிராம ரேஷனை எடுத்துவிட சர்க்கார் முனைந்தபோது, தென்னாட்டில் உள்ள நூற்றுக்கு நூறு பத்திரிகைகளும் கிராம ரேஷனை எடுக்கக் கூடாது என்று காரசாரமாகக்

(14-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

சென்னை 22—9—51 சனிக்கிழமை

# இலட்சியப் பாதையில் இரண்டு ஆண்டுகள்!

கண்களிலே நீர்! முகத்திலே வேதனை! கைகளிலே நடுக்கம்! கால்களிலோ உதறல்! நெஞ்சிலோ, ஓராயிரம் தேள் ஒருங்கே இருந்து கொட்டுவது போன்ற கொடிய நிலை! சொற்களிலோ, ஐயகோ, நம் தலைவரா இங்ஙனம் நடந்து கொண்டார் என்கிற சோக கீதம்!—இதுதான் நம்முடைய நிலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நாம் நம்முடைய பயணத்தைத் தொடங்கிய போது!

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கண்ணீர்த் துளியாக, சோக சித்திரமாக, வேதனையின் வடிவமாக, துயரத்தின் சின்னமாகக் காட்சி தந்துகொண்டிருந்தோம் அன்று!

பெரியார் நம்மைவிட்டுப் பிரிந்தார். நாம் பெரியாரை விட்டுப் பிரிந்தோம். அந்தப் பிரிவு என்ன சாமான்யமானதா? எளிதிலே தாங்கிக் கொள்ளக் கூடியதா? ஏதோ பிரிந்தோம்—தீர்ந்தது—இனி வேறு வேலை பார்ப்போம் என்று சடசட வெனக் கூறிவிட்டு மடமடவென வேறு வேலையிற் புகக்கூடிய அளவு சிறிய சம்பவமா? கிடையாதே! பெரியாருக்கும் நமக்கும் ஏற்பட்டிருந்த தொடர்பு தந்தைக்கும் தனயர்கட்கும் மட்டுமே ஏற்படக்கூடிய தொடர்பு! அன்னைக்கும் அவளுடைய அருமை மதலைகளுக்கும் இடையே மட்டுமே காணப்படக்கூடிய தொடர்பு! பாசத்தால், பந்தத்தால், அன்பால், நீக்கமுடியாத நேசத்தால், நெடுங்காலப் பழக்கத்தால் உண்டாகக்கூடிய தொடர்பு! நம் இரத்தத்தோடு இரத்தமாக சதையோடு சதையாக, உடலோடு உடலாக, உள்ளத்தோடு உள்ளமாகக் கலந்துபோயிருந்த தொடர்பு! எனவேதான், தலைவரின் திருமணம், அந்த அருமையான தொடர்புச் சங்கிலியை வெட்டிப் பிரிக்க வந்த வேதனை உளியாக மாறியபோது, நம்முடைய உள்ளம் கண்ணீர் வெள்ளமாக மாறிற்று.

கண்ணீர் பெருக்கினோம்—கோவெனக் கதறினோம்—தலைவரே தகுமா இது என்று கேட்டோம் — வேண்டாம் இந்தப் போக்கு, விட்டு விலகிடுங்கள் இந்தக் கொடுமையிலிருந்து என்று கெஞ்சினோம்—மீண்டும் மீண்டும் வேண்டினோம்—கேட்டாரா தலைவர் — விட்டு விலகினாரா தம் தவறான போக்கிலிருந்து—இல்லை இல்லை—தம் தவறான போக்கிலிருந்து மாறிச் சரியான பாதை வழி நடந்து நம் சித்தத்தை யெல்லாம் குளிரச் செய்வதற்குப் பதிலாக அனல் கட்டிகளை அள்ளி வீசுவது போலச் சுடுசொற்களை நச்சுக் கிண்ணத்திலே தோய்த்தெடுத்து ஓயாமல் வீசினார் நம் மீது!

மாறிவிடுவார் நம் தலைவர்—விட்டுவிடுவார் திருமணத்தை—மறந்திடுவார் தம் புதுப்போக்கை—கட்டித் தழுவிடுவார் நம்மையெல்லாம் என்று பல நாட்கள் பொறுத்துப் பார்த்தோம். நாட்கள் வாரங்களாயின, வாரங்கள் மாதங்களுமாயின. தலைவரோ தம் போக்கிலிருந்து மாறக் காணோம். நம் மீது ஏசல் அந்தாதி வாசிப்பதையும் நிறுத்தக் காணோம்.

என் செய்வது இந்நிலையில்? ஆயுள் முழுதும் கண்ணீரா பெருக்கிக் கொண்டிருக்க முடியும் நாம்? தலைவர் தவறிவிட்டார் என்ற ஒரு காரணத்திற்காக, இலட்சியத்தை மறந்து நிற்கும் எத்தர்களாகவா மாறமுடியும்? கொள்கையை மறந்து, மக்கட் சமுதாயத்தை மறந்து, அச்சமுதாயத்தைத் திருத்தித் தீரவேண்டிய தீரமிக்க பணியை மறந்து வெறும் கண்ணீர்த் துளிகளாகவா என்றென்றும் இருக்கமுடியும்?

மூன்று மாதங்கள் பொறுத்துப் பார்த்தோம்—தலைவர் ஜனநாயகப் பாதைக்குத் திரும்பக் காணோம்—திரும்பாதது மட்டுமா, சர்வாதிகாரச் சிந்துகளை வேகவேகமாக இசைக்கவும் தொடங்கினார்—நான் சர்வாதிகாரிதான், சர்வாதிகாரியாகத்தான் இருப்பேன், அப்படித்தான் இருக்கவேண்டும், அப்படி இருந்தால்தான் காரியம் நடக்கும் என்றெல்லாம் விபரீத வாசகங்களை விசித்திரமாக வீசினார்—இந்நிலையில் வேறென்ன

செய்வது நாம்—அவரை விட்டுப் பிரிந்தோம்—புதிய பாதை வகுத்தோம்—திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்தோம்—வழியும் கண்ணீரை ஒரு கரத்தால் துடைத்துக் கொண்டே, மற்றொரு கரத்தால் புதிய கழகத்தின் வளர்ச்சிக்கான புரட்சித் திட்டங்களை, இலட்சியம் எனும் ஏட்டிலே, தியாகம் எனும் பேனாகொண்டு வேக வேகமாகத் தீட்டினோம். புதிய பாதை வகுப்போம்—பூரிப்புடன் அதில் நடப்போம் என்கிற மொழியையே நம்முடைய வாழ்க்கை வழியாகக் கொண்டோம். பயணம் ஆரம்பமாயிற்று—புதிய பயணம்! புரட்சிப் பயணம்! புத்துலகை நாடிச் செல்லும் புது வாழ்வுப் பயணம்! நாட்டு மக்களுக்கெல்லாம் நல்லதோர் வாழ்க்கையை அளிப்பதற்காகக் கொள்கைச் சிங்கங்கள் பீடுநடை போட்டுப் பூரிப்புடன் நடந்துசெல்லும் நற்றமிழ்ப் பயணம்!

நாம் நம்முடைய பயணத்தைத் தொடங்கியபோது, கிண்டல்—கேலி—எதிர்ப்பு—ஏளனம்—ஏசல்—தூற்றல்—இவைதான் நமக்குக் கிடைத்த பரிசுகள்.

"இதுகளாவது ஓர் இயக்கத்தை வெற்றிகரமாக நடத்துவதாவது? அது ஒருபோதும் முடியாத காரியம்"—இந்த வாசகங்கள்தான் நமக்கு அளிக்கப்பட்ட ஆதரவு மொழிகள்.

"நேற்று வந்து இன்று பேச்சாளர் ஆனதுகள்—இதுகள் தொடங்குகின்றன ஒரு கட்சி—இந்தக் கட்சியா உருப்படப் போகிறது?"—இந்தச் சொற்றொடர்கள்தான் நமக்குத் தரப்பட்ட பாராட்டுத் தாள்கள்.

"எண்ணிக் கொள்ளுங்கள் வேண்டுமானால்—சரியாக முப்பது நாட்கள்கூட வாழாது இந்தக் கழகம்"—இந்த அவசர ஆரூடம்தான் நம்மை நோக்கி வீசப்பட்ட இன்பமொழி.

தாய்க் கழகத்தின் ஏசல்—பிரிந்த தலைவரின் கிண்டல்—மாற்றுக் கட்சிகளில் தூற்றல்—ஆளவந்தார்களின் உருட்டு விழிகள்—சின்னதுகள் பெரியதுகளின் சலசலப்பு—செங்காங்கடைச் சொல்லழகர்களின் சுடுசொல் பாணம்—இத்தனைக்கும் இடையேதான் நம்முடைய பயணம் தொடக்கமாயிற்று.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நாம் நம்முடைய புதிய பயணத்தைத் தொடங்கியபோது இருந்த நிலை இது!

ஆனால், இன்று?

தாய்க் கழகம் பார்த்துப் பொறாமைப்படும் அளவு—நம் முன்னாள் தலைவர் கண்டு ஆச்சரியத்தால் அசையாச் சிலையாகும் அளவு—மாற்றுக் கட்சிகளின் உள்ளம் அச்சத்தால் நடுங்கி வெட்கத்தால் குறுகும் அளவு—ஆளவந்தார்களின் அடக்குமுறை ஆயுதங்கள் நம்முடைய மார்பிலே பட்டுத் தெறித்து உள்ளே ஊடுருவ முடியாமல் உடைந்து விழுந்து நொறுங்கிப் போகும் அளவு—சந்து முனைச் சிந்து நடைக்காரர்கள் திட்டிப் பயனில்லை தயாபரனே—இதுகளை ஏசுவதால் இலாபமில்லை ஈசுவரனே என்று மூலைதேடி முகாரி பாடும் அளவு—ஆம்! மாற்றாரும் வேற்றாரும் கண்டு ஆச்சரியமும் அச்சமும் ஒருங்கே கொள்ளும் அளவு, திராவிட முன்னேற்றக் கழகம், சிறப்புடன் வளர்ந்து செம்மாந்து நிற்கிறது.

இரண்டே ஆண்டுகளில் இவ்வளவு பெரிய சக்தியாக வளர்ச்சி பெற்ற கட்சி உலகத்திலேயே வேறு கிடையாது என்று—நாமல்ல—நம்மை எதிர்த்து எதிர்த்து, அப்படி எதிர்த்ததால் மூக்குடைபட்டுக் கிடக்கும் தேசியத் தம்பிரான்களே வாய்விட்டுக் கூறும் அளவுக்கு இன்று நாம் வளர்ச்சி பெற்றிருக்கிறோம்.

இரவும் பகலும் ஆட்சியாளர்களின் சிந்தனை நம்மீதுதான் படிந்துகிடக்கிறது.

பொழுது விடிந்தால் பொழுது சாய்ந்தால், காங்கிரஸ் கண்ணியவான்கள் நம்மைப் பற்றித்தான் எண்ணி நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த முற்போக்குச் சக்தியின் முழு ஆதரவு மட்டும் நமக்குக் கிடைத்து விட்டால்........அடா அடா......பொதுவுடைமைக் கட்சியினர் இவ்வண்ணம் பூரிப்புடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் மட்டும் தேர்தலுக்கு நிற்க ஒப்புக்கொண்டு விட்டால் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை காங்கிரசுக்குக் கல்லறை நிச்சயம்—காங்கிரசின் கொடுமை கண்டு குமுறி நிற்பவர்கள் எல்லாம் இப்படிக் கூறி எப்படியாவது நம்மைத் தேர்தல் அரங்கத்தில் இழுத்து நிறுத்தப் பார்க்கின்றனர்.

தமிழகத்தில் இதுகள் இருப்பதால் நாம் உள்ளே நுழையவே முடியவில்லையே என்று சோகத்துடன் பேசி சோர்வுடன் நிற்கிறார்கள் ஜெயப்பிரகாஷ் நாராயணர்கள்.

தமிழகமா—அது திராவிட முன்னேற்றக் கழகக் கோட்டையாயிற்றே—அங்கே நமக்கு இடமா?—அது எப்படிக் கிடைக்கும்? கிருபாளினி கோஷ்டி இப்படித்தான் பேசிக் கொண்டிருக்கிறது.

"திராவிட முன்னேற்றக் கழகமா—அதுதான் நம் குறை

களைத் தீர்க்கும் குணவான்களின் கோட்டம் — சமுதாயச் சழக்குகளுக்குச் சவுக்கடி தரும் சிலர்களின் சீர்மிகு மண்டபம் — மூட நம்பிக்கைகளை முறித்துத் தள்ளும் பகுத்தறிவுப் படை வீரர்களின் பாசறை — அஞ்சாநெஞ்சு படைத்த அறப்போர் அண்ணல்களின் இருதய கீதம்" — தமிழ்நாட்டு மக்களின் தினசரிப் பேச்சு இந்தச் சொல் வீச்சு!

ஆம்!

ஆளவந்தார்கள்,

அவர்களை ஆட்டிப் படைப்பவர்கள்,

சோஷியலிஸ்ட் கட்சியினர்,

பொதுவுடைமை இயக்கத்தினர்,

பிரஜா கட்சியினர்,

நாட்டுப் பொதுமக்கள்,

வைதீக வேடதாரிகள்,

சீர்திருத்தச் சிங்க ஏறுகள்,

கல்லூரி மண்டபங்கள்,

உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள்,

ஆசிரியர் கோட்டங்கள்,

பெண்கள் வட்டாரம்,

ஆட்சிப்பீட அலுவலகங்கள்,

பல துறை வணிக நிலயங்கள்

ஆகிய எல்லா வட்டாரங்களின் கவனத்தையும் ஒருங்கே கவர்ந்து நிற்கும் ஒப்பற்ற சக்தியாக விளங்குகிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

இரண்டே ஆண்டுக் காலத்தில், நாம், இருபதாண்டுக் கால வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம்.

இந்த வளர்ச்சி, நமக்குப் பெருமை தரக்கூடியது; பூரிப்பை அளிக்கக் கூடியது; எண்ணி எண்ணிப் பார்க்க மனம் இன்பம் கொண்டாடுதே என்று! ஆனந்தம் கீதம் பாடி மகிழ்ச்சி மாளிகையை நாடி ஓடும்படி நம்மைத் தூண்டக் கூடியது.

இந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக நாம் செய்துள்ள பிரசாரம்—அது எவ்வளவு ஏராளம்! நாடு நகரங்களில், பட்டி தொட்டிகளில், மூலை முடுக்குகளில், வனம் வனாந்தரங்களில் —எங்கெங்கெல்லாம் பிரசாரம் செய்திருக்கிறோம் நாம்! பொதுக் கூட்டங்கள், மாநாட்டு மேடைகள், நாடக அரங்குகள், சிறந்த புத்தகங்கள், திரைப்படக்காட்சிகள் என்று எத்தனை எத்தனை பிரசார முறைகளைக் கையாண்டிருக்கிறோம் நாம்! எண்ணிப் பார்த்தால் எவ்வளவு பூரிப்பு ஏற்படுகிறது நமக்கு!

வயது இரண்டு தான் முடிந்திருக்கிறது நம் கழகத்திற்கு! ஆனால் இந்தச் சின்னஞ் சிறு வயதிலேயே இந்தக் குழந்தை புன்னகையுடன் தாங்கியிருக்கிற அடக்குமுறை அம்புகள் எத்தனை எத்தனை நூறுகள்!

144—153 ஏ—123 ஏ—தப்பாக்கி வேட்டுகள்—தடியடி தர்பார்கள்—தேனீக் கொடுமைகள் —நாரணமங்கலம் நிகழ்ச்சிகள் —குன்றத்தூர் அக்கிரமங்கள்— சிறைச்சாலை அழைப்புகள் — ஜாமீன் பாணங்கள்—பறிமுதல் நடவடிக்கைகள் — கடுங்காவல் தண்டனைகள்— கைவிலங்கிட்ட அநியாயங்கள்—அடே அப்பா! எவ்வளவு நீளமான அடக்குமுறைப்பட்டியல்! ஆனால் என்ன ஆச்சரியம்! திராவிட முன்னேற்றக் கழகம், அடுக்கடுக்காக நம் மீது வீசப்பட்ட அடக்குமுறை அம்புகளால் அணுவளவும் சிதையவில்லை!

அடக்குமுறை கொடிய அளவில்—எதிர்ப்பும் ஏசலும் ஏராளம் — ஆதரவும் பாராட்டும் மிகக் கொஞ்சம்! — பகைவர் பாணங்கள் பல வகையில்—என்றாலும் நம் வளர்ச்சியும் பிரசாரமும் பகைவரும் கண்டு போற்றும் அளவு, ஏராளம்!

இதைவிட நமக்குப் பெருமை தரக்கூடிய நிலையும், பூரிப்பு அளிக்கக் கூடிய சூழ்நிலை, நாம் எண்ணி மகிழக் கூடிய சம்பவம் வேறென்ன இருக்க முடியும்?

இப்படிப் பட்ட மகிழ்ச்சிகரமான நிலையில், பகுத்தறிவுப் பாசறையாகிய திராவிட முன்னேற்றக் கழகம், சென்ற செப்டம்பர் 16-ஆம் தேதியோடு தன் இரண்டாவதாண்டை முடித்துவிட்டு, செப்டம்பர் 17 அன்று, மூன்றாவதாண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது.

சென்ற இரண்டாண்டுக் காலத்தில் நாம் பெற்ற வெற்றிகளின் பட்டியல் நமக்கு உற்சாகமூட்ட, ஆட்சியாளர்களின் அநீசயான போக்குகளால் நம் உடலிலே உருவாக்கப்பட்டுள்ள தியாகத் தழும்புகள் நம் உள்ளத்திற்கு உரமூட்ட, அடக்குமுறைகளைத் தாங்கித் தாங்கிப் பழகிப் போய்விட்ட நம் உள்ளமும் உடலும் எத்தகைய போராட்டத்திற்கும் தயார் தயார் என்று துள்ளிக் குதித்துத் தேன்மொழி பேச, இன்பத் திராவிடமே எமது இலட்சியம் என்று விண் அதிர முழக்கமிடும் இலட்சியக் காளைகள் ஆயிரமாயிரவர்கள் வரிசை வரிசையாக அணிவகுத்து நிற்க, அந்த அணிவகுப்பைப் பார்த்து ஆனந்தத்துடன்—ஆர்வத்துடன் —அடக்க இயலாத மகிழ்ச்சியுடன்—இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் என்கிற மணிவாசகத்தை மொழிந்த வண்ணம் நம் அருமைத் தலைவர் அண்ணாதுரை அவர்களின் அறிவுத் திரு உருவம் காட்சி தர, தம்பி உடையான் படைக்கு அஞ்சான் என்கிற மொழியை மெய்ப்பிப்பதுபோல, அண்ணா அவர்களின் அருகே, அஞ்சா

நெஞ்சமும் அருந்திறல் ஆற்றலும் படைத்த அவர்தம் தம்பிமார்கள் பலர் அறப்போர்த் தளபதிகளாக இருந்து, பகுத்தறிவுப் படை வரிசைகளின் பல்வேறு அணிவகுப்புகளுக்குத் தலைமை தாங்கி நிற்க, நாம்—நாம் என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற போர்க்கொடி தாங்கி நிற்கும் அறப்போர் வீரர்கள், நம் இலட்சியப் பாதையில் இரண்டு மைல்களைக் கடந்துவிட்டு மூன்றுவது மைல் நோக்கி நம் பயணத்தைத் தொடங்கியிருக்கிறோம் இவ்வாரம்.

நம்மிடத்திலே சூது இல்லை; சூழ்ச்சி இல்லை, சுயநல எண்ணம் இல்லை, சரண்டல் மனோபாவம் இல்லை, பொது வாழ்வைச் சொந்த வாழ்வை வளமாக்கிக் கொள்வதற்காகக் கிடைத்த சொகுசுவாயிலாகக் கருதும் குள்ள உள்ளம் இல்லை, அஞ்சி அஞ்சிச் சாகும் அசட்டு நெஞ்சம் இல்லை, எனவேதான் நம்மிடத்திலே சோர்வு இல்லை —சோகம் இல்லை — வாட்டம் இல்லை — வருத்தமுமில்லை — தோல்வியோ நம்மை எட்டியும் பார்ப்பதில்லை.

மூன்றுவது ஆண்டிலேயும், நம்முடைய பயணம், சிறப்பு மிக்கதாக, சீலம் நிறைந்ததாக, அஞ்சாமை செறிந்ததாக, வெற்றிகள் பல அமைந்ததாக, தூய்மை உணர்ச்சி என்றும் தூர்தபி முழக்கத்தால் நடத்தப்படுவதாக நிச்சயம் அமைந்திருக்கும் என்பதிலே நமக்குத் துளியளவும் ஐயம் இல்லை.

வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம்! வளர்க அதன் புகழ்!

---


வெளிவந்து விட்டது ! புதிய வெளியீடுகள் !!

சிந்தனை சிற்பி, சி. பி. சிற்றரசு எழுதியது

| | | |
|---|---|---|
| 1. மார்டின் லூதர் | .... | 0 10 0 |
| 2. வெங்கலச் சிலை | ... | 0 8 0 |

அடுத்து வரும் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. விஷக்கோப்பை | (சாக்ரடீஸ்) | அச்சில் |
| 2. தங்க விலங்கு | (நாடகம்) | ,, |

தமிழ் மன்றம்

தெப்பக்குளம் :: திருச்சிராப்பள்ளி


(12-ம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டை சிவராமகிருஷ்ணன், நெல்லிக்குப்பம் மதியழகன், மண்டல மாணிக்கம் முனியப்ப முதலியார், புதுக்கோட்டை செல்வம் கம்பெனி, விருத்தாசலம் கே. நாகரத்தினம், வேலூர் திராவிடன் பதிப்பகம், மாயவரம் சுந்தரம், என். ஆர். சாமியப்ப முதலியார் தஞ்சாவூர், கணபதி—சங்கரன்கோயில், நாகை கே. சண்முகம், சிங்கா நல்லூர் பழனிசாமி செட்டியார், திருப்பாதிரிப்புலியூர் எம். இளங்கோ, மதுரை இராஜரத்தினம், காஞ்சிபுரம் எம். கே. என். சோமசுந்தர முதலியார் அண்டு சன்ஸ், மணப்பாறை "போர்வாள்" விற்பனையாளர், போடிநாயக்கனூர் சண்முகம், செம்பனார்கோவில் கோவிந்தசாமி முதலியார், தனுஷ்கோடி தி. மு. கழகம், ஆம்பூர் டி. சண்முகம், குடந்தை கே. கே நீலமேகம், காஞ்சிபுரம் கே. கே. எஸ். மணி, காஞ்சிபுரம் தி. மு. கழகம், டி. கே. முனிசாமி காட்பாடி, திருப்பூர் எஸ். ஆர். சுப்ரமண்யம், வித்துவான் கோ. கதிர்வேலு முதலியார் வேலூர், புலவர் அழகுவேலன்—அன்பரசி தம்பதிகள் பொன்னேரி, வை. பு. ஆ. சௌந்தரபாண்டியன் அண்டு பிரதர் புட்டிவீரன்பட்டி, K.T S, மணிகம்பம், கீடப்பூர் சு. தர்மராஜ், புதுப்பட்டி எம். இரத்தினம், சுண்டக்காமுத்தூர் தாண்டவன், பெருங்களூர் காளகா நியூஸ் ஏஜன்சி, உசிலம்பட்டி ஏகநாதன், பேளூர் பி. எஸ். ஆறுமுகம், பி.எஸ்.பி. எழிலன், இராஜபாளையம் கே சந்திரன், புளியங்குடி கங்காதரன், கோவில்பட்டி ஈ. வி. ஏ. வள்ளிமுத்து, அருப்புக்கோட்டை சண்முகவேலு, திருவாரூர் முனிசிபல் சேர்மன் தி. நா. சபாபதி முதலியார், எஸ். எம். நாயகம் பம்பாய், தமிழ்ப் பண்ணை யாழ்ப்பாணம், திரிகோணமலை தாசைய பிள்ளை, பெரியகுளம் பி. என். மாரியப்பன், கே.பி. பாலசுந்தரம் கோவை, அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி, சண்முகசுந்தரம், சிவசுப்ரமணியம், குழந்தைவேலு, சோழவந்தான் சம்சுதீன், பழனி ஆறுமுக முதலியார், விஜயபுரம் குப்புசாமி, பொறையாறு வைரக்கண்ணு, காஞ்சிபுரம் சம்பந்தமூர்த்தி, மண்டலமாணிக்கம் இராமகிருஷ்ணன், மண்டலமாணிக்கம் எஸ். இராமசாமி, திருச்சி பராங்குசம், நெய்யூர் எஸ் கணேசன், பொன்னமராவதி ஏகாம்பரம், திருச்சி என். சங்கரன், என். சாம்பு, குறள் நூலகம் கோயம்புத்தூர், திருநாவுக்கரசு பட்டுக்கோட்டை, மூவண்ணு தேவராசன்.


(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பன் கல்லூரித் தலைவர் ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யர், ஷை கல்லூரி பொருள்நூல் பேராசிரியர் முத்தையா எம். ஏ, ஷை கல்லூரி பேராசிரியர் சி. டி. ராஜேஸ்வரன் பி. எஸ்சி, புலவர் பாலூர் கண்ணப்ப முதலியார், டி. என். இராமன், சென்னை ப. வாணன், பி. ஆர். கோகுலகிருஷ்ணன் பி.ஏ. பி.எல், தனராம் பி.ஏ, புலவர் வில்வபதி, புலவர் உலகநாதன், தோழியர் மலர்முகத் தம்மையார், "பிரசண்டவிகடன்' துணையாசிரியர் அ. இளங்கோவன், தோழியர் குஞ்சிதம் குருசாமி பி. ஏ. எல்.டி, வல்லை பாலசுப்பிரமணியம் பி. ஏ, சென்னை கே. வி. கே. சாமி, எம். பி. கந்தசாமி முதலியார் பி.ஏ, பி. ஈ., புலவர் தணிகாசலம் பிள்ளை, ஜீவபந்து ஸ்ரீபால், சென்னை தோழமைக் கழகத் தலைவர் ஏ. ஆர். சேஷாசலம், "ஆரம்பக் கல்வி' ஆசிரியர் பி. வீரராகவன், டாக்டர் ஒ. சோமசுந்தரம் எம். பி. பி. எஸ், டாக்டர் சுப்ரமண்யம் எம். பி. பி. எஸ்.

திருமண விழாவில் நேரில் கலந்துகொள்ள இயலாமைக்கு வருந்தம் தெரிவித்துக்கொண்டும், மணமக்களை வாழ்த்தியும், தந்தி அல்லது கடிதம் அனுப்பிய தோழர்களின் பெயர்கள்:—

ஏ. வி. பி. ஆசைத்தம்பி—விருதுநகர், பட்டுக்கோட்டை சௌரிராஜன், டாக்டர் மா. இராசமாணிக்கம் எம்.ஏ எல்.டி., எம்.ஓ.எல்., விவேகானந்தா கல்லூரி பேராசிரியர், வித்வான் வெள்ளைவாரணன் தமிழ் விரிவுரையாளர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், ஈரோடு "ஈரோடுவாசி" ஆசிரியர் பி. ஷண்முகவேலாயுதம், சி. இலக்குவனார் பி. ஓ. எல். செந்திக்குமார நாடார் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர், அ. பொன்னம்பலனார், ஔவை துரைசாமிப் பிள்ளை, B O L. தமிழ்ப் பேராசிரியர் தியாகராயர் கல்லூரி மதுரை, ஏ. பி ஜனார்த்தனம் எம். ஏ., மு. இராசாக்கண்ணன் பி ஓ.எல். தமிழ்ப் பேராசிரியர் அரசினர் கலைக் கல்லூரி கோயம்புத்தூர், எஸ் தவமணிராசன், ஈரோடு அப்பாவு, திருச்சி கி ஆ. பெ. விசுவநாதம், போளூர் சுப்ரமணியம், "பொன்னி" ஆசிரியர் முருகு சுப்ரமணியம், "செங்குந்த மித்திரன்" ஆசிரியர் சி. நடராசன் பி ஏ.பி.எல்., கே. கோவிந்தசாமி—சென்னை மாவட்ட தி.மு.க முன்னாள் செயலாளர், இரா. இளம்வழுதி எம்.ஏ.பி.எல்., கோயம்புத்தூர் வி. எஸ். செங்கோட்டையா, "தமிழ்த் தென்றல்" ஆசிரியர் வி வி ராமசாமி விருதுநகர், ச. சிவப்பிரகாசம் புதுவை, இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர், "இராவண காவியம்" ஆசிரியர் புலவர் குழந்தை, சி.பி. சிற்றரசு வேலூர், ஈ. வெ. கி. சம்பத் ஈரோடு, "விடுதலை" ஆசிரியர் எஸ். குருசாமி, குஞ்சிதம் அம்மையார் பி.ஏ.எல்.டி., டி.பி. மீனாட்சிசுந்தரம்பிள்ளை எம்.ஏ. பி. எல். எம். ஓ. எல்., துரை அரங்கசாமிப் பிள்ளை B O.L தமிழ் விரிவுரையாளர் சென்னை பல்கலைக் கழகம், கோவை கலைக்கல்லூரி சரித்திரப் பேராசிரியர் எஸ் வி. சிட்டிபாபு எம்.ஏ., திருச்சி சப்ஜட்ஜ் வி. ரத்தினம் பி.ஏ.பி.எல்., ஆ வே. முத்தையா முதலியார் புதுச்சேரி, நாமக்கல் ஜில்லா முன்சீப் சி. டி. நடராசன் பி.ஏ.பி.எல்., ஜி. டி. நாயுடு கோயம்புத்தூர், சேலம் சித்தையன், எஸ். ஆர். சந்தானம் ஈரோடு, எம். வி. சாமிநாதமுதலியார் குடியாத்தம், "தமிழ்முரசு" ராதா சென்னை, கோவிந்தராஜலு செட்டி, சிக்கல் திராவிடர் கழகத் தலைவர் என். நாகப்பா, உத்தமபாளையம் ரஜாக், சேனாபதி முதலியார் குப்புசாமி முதலியார் குடியாத்தம், ஏ. என். வேலன், அநந்தபூர் நாகப்பன், ஆக்கூர் சு. இராமலிங்கம், மு. பொன்னுசாமி முதலியார் காஞ்சிபுரம், பாரதி புத்தக நிலையம் மதுரை, நா ப. தணிகை அரசு வாலாஜாபாத், திருப்பத்தூர் வி. எம். சிவராஜமாணிக்கம், கடலூர் எல். சண்முகம், ஆடலரசு சைதாப்பேட்டை, டி. இராதாகிருஷ்ணன் சென்னை, அ. பசுபதி முதலியார் மாணம்பதி, எம். ஏழுமலை சேத்துப்பட்டு, திருவண்ணாமலை என். ஜி பெருமாள், தன நடராசன் திருப்பத்தூர், ஏ. என். வேலன் பம்பாய், பரமானந்தம் கடலூர், R T. அரசு சென்னை, சுப்ரமண்யம் தர்மபுரி, ஈவே. சோமசுந்தரம் பி. ஏ. நகராட்சி ஆணையாளர் புதுக்கோட்டை, தில்லை அறிவழகன் சிதம்பரம், ஜி. என். ராஜகோபி, எம். பிச்சை திண்டுக்கல், கே. வி. நல்லுசாமி நாமக்கல், முத்துக்குமாரசாமி முதலியார் ஹெட்மாஸ்டர் காஞ்சிபுரம், ச. மாணிக்க முதலியார் மதுரை, எல். ஏ. இராமசாமி லால்குடி, கீழப்பிடாகை மறுமலர்ச்சிக் கழகம், நிலக்கோட்டை தனுஷ்கோடி, ச கு. ப. பழனிவேலு மாயவரம், பழனிசாமி தஞ்சை புளியம்பட்டி, இராமநாதன் சோளங்கிபுரம், செல்வம் தூத்துக்குடி, அ. மு. பரமசிவானந்தம்—தமிழ் விரிவுரையாளர் சென்னை பச்சையப்பன் கல்லூரி, எஸ். வி. இராமதாஸ் தியாகராய நகர், எஸ். ஜெயராமன் திருக்கோயிலூர், வித்துவான் மெ. சுந்தரம் அண்ணாமலை நகர், முத்துக் கருப்பன் தாத்தையங்கார்பேட்டை, சிவக்கொழுந்து சத்தியமங்கலம், சென்னிமலை எம்.எஸ். கணபதி, ஜோலார்பேட்டை கே. என். கேசவன், ஆற்காடு பொன்னம்பலம், திண்டுக்கல் தம்பி, பட்டுக்

(11-ம் பக்கம் பார்க்க)




எட்டாம் பகுதி

## ஈன்றபொழுதினும்…!

அன்று இரவு எனக்குத் தூக்கம் வரவில்லை! மீளாத் துயரம் மனத்தில் குடிகொண்டுள்ள போதும் தூக்கம் வராது! மட்டற்ற மகிழ்ச்சி உள்ளத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் பொழுதும் கண்ணயர முடியாது! சிந்தனை ஓடிக்கொண்டேயிருக்கும்!.. பெருமை பெருகுடன் எண்ணங்கள் நிழலாடிக்கொண்டேயிருக்கும் நெஞ்சில்! மகிழ்ச்சி மிகுதியிருந்தால்!...

அன்று எனக்குத் தூக்கம் வராததற்குக் காரணம் என் மனம் மகிழ்ச்சிக் கடலிலே தோய்ந்திருந்ததுதான்! ஆம், பல்லாண்டுகளாக முயற்சியோடு உழைத்து, கொண்ட கலையில் நற்பயிற்சி பெற்று புகழுடன் விளங்கும் நிலையையடைந்திருந்தேன் நான்! முல்லையில் மட்டுமன்றி பிறநாடுகளிலும் என் கலைத்திறன் பரவியிருந்தது அன்றுதான் எனக்குத் தெரியவந்தது! வேற்று நாட்டவர் என் ஓவியங்களை வரவேற்றிருக்கிறார்கள்!...... நான் என் ஓவியங்களை "ஈன்றபொழுதினும் பெரிதுவந்தேன்!" அவற்றைச் சிறந்தன எனப்பிறர் சொல்லக் கேட்ட காலை!;.....

ஓவியக்கோலை யேந்திக்கொண்டு டதறும் கைகளோடு வர்ணங்களைப் பூசிப் பலப்பல திரைகளைப் பாழாக்கிய காட்சி!—பல நாட்களாகக் கஷ்டப் பட்டு உருவாக்கிய ஓவியம் கடைசியில் ஓர் நாள் வர்ணக் குழம்பு வழிந்து அழகிழந்த காட்சி!—அப்பொழுது எனக்கேற்பட்ட வேதனை—என் ஓவியங்களை என் நண்பர்கள் பார்த்துச் சிரித்த ஏளனச் சிரிப்புகள்!—கலையிலும் என்னை ஊக்குவிக்காத என் தோழர்களும் பெரியோர்கள் பலரும் வீசிய கேலிச் சொற்கள், கிண்டல் பேச்சுக்கள், குத்தல் வார்த்தைகள், என் பெற்றோரின் கண்டனக் கக்குதல்கள்—"உன் வயது இளைஞர்களெல்லாம் வாள் சுழற்றும்போது நீ ஓவியக் கோலுடன் வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்க வெட்கமாக வில்லையா உனக்கு? இத்தனை நாட்களாக ஓவியங்கள் பல தீட்டினாயே, ஒன்றாவது உருப்படியான சரக்காயிருக்கின்றதா? யார் உள்ளத்தையாவது கவர்ந்துள்ளதா?......ஒரு சல்லிக் காசாவது உனக்குச் சம்பாதித்துக் கொடுத்துள்ளதா?...ஒன்றும் கிடையாது. ஆனால் ஒன்றைச் செய்துள்ளது! ஆம், நீ ஒரு கோழை! பைத்தியக்காரன் என்பதை வெளிப்படுத்தியுள்ளன உன் ஓவியங்கள்!......" என் பெற்றோர் அக்காலத்தில் அனுதினமும் பாடிக் கொண்டுவந்த இந்த வசை விருத்தம் எல்லாம் என் நினைவிலே மிதந்து கொண்டிருந்தன!...

"அத்தான்!...ஏன் வருத்தமாயிருக்கிறீர்கள்?..."

"..........."

"ஏன் பேசமாட்டேன் என்கிறீர்கள்?..."

"மற்றவர்கள் என்னைப் பற்றிப் பேசும் பேச்சுக்களையெல்லாம் என்னால் கேட்டுச் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை, கண்ணே!...'

"என்ன அத்தான்!...இதற்காகவா இப்படி வருந்துவது?......பேசுவதற்கென்றே பல பிரகஸ்பதிகள் இருக்கின்றார்களே!..."

"ஆம். கண்ணே! பிறரைப் பற்றிப் பேசுவதற்கென்றே பலர் இருக்கிறார்கள்! பிறரைப் பற்றிப்பேசுவது ஒன்றேதான் அவர்களுக்குத் தொழில்!...நான் பைத்தியக்காரனாம்! கோழையாம்! இப்படிப் பலர் பேசிக்கொள்கிறார்கள்! என் ஓவியங்களை என் நண்பர்களிடமும், சில பெரிய மனிதர்களிடமும் காட்டினால் 'இந்தத் தொழில் உனக்கு எதற்கப்பா? நீ என்ன ஓவியர் வம்சத்தில் பிறந்தவனா? வாளேந்தி வம்சப் பெருமையைக் காப்பாற்றப்பா...' என்கிறார்கள்!...கண்ணே! எனக்கு அவைகளைப் பற்றியெல்லாம் கூட கவலையில்லை! என் ஓவியங்களை என் எதிரில் புகழ்ந்து விட்டுத் தலைமறைவில் அவைகளைத் தூற்றும் பிண்டங்கள் சில இருக்கின்றனவே என்பதற்காகத்தான் நான் வருந்துகிறேன்..."

"அத்தான், இந்தச்செல்லாக் காசுகளின் சலசலப்பைக் கண்டா நீர் சஞ்சலப்படுகிறீர்?...உலகம் எப்பொழுதும் வாயைத்திறந்து கொண்டிருக்கும். கொஞ்ச நாட்களுக்கு வசைமாரி பொழியும்! கொஞ்ச நாட்களுக்கு வாழ்த்துப் பாடல் பாடும்! சிறிது நாட்களுக்குத் தூற்றும்! பின் துதிபாடும்!... இது தாங்கள் அறிந்ததுதானே?..."

"வேணி! என் ஓவியங்களைப் பாராட்ட எனக்கு ஒரே ஒரு ஆள் இருந்தால் போதும்! என் சிருஷ்டிகளை இரசிக்க ஒரு உண்மை இரசிகர் இருந்தால் போதும்!...அந்த ஒரு இரசிகரையும் நான் பெற்றுத்தானிருக்கிறேன்! ஆம், கண்ணே! நீ ஒருத்திதான் என்னுடைய சித்திரங்களை வரவேற்கின்றவள்! வாழ்த்துகிறவள்! இரசிக்கிறவள்..."

"அத்தான்! நீங்கள் ஒருவர்தான் நான் இரசிக்கக்கூடிய ஓவியங்களைத் தீட்டுகிறவர்!..."

அன்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு நாளிரவில் ஓர் பூஞ்சோலையில் எனக்கும் என் வேணிக்குமிடையே நிகழ்ந்த இவ்வுரையாடல்!—சோர்ந்து சோகமடைந்து சோபையிழந்திருந்த என்னை என் ஆசைக் காதலி தேற்றி, 'கொண்டகலையைக் கைவிடாதீர்' எனக்கூறிய காட்சி!—என் அழகுராணி, அன்பு,

(16-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுரைகள் தீட்டின. கேளாக் காதர்களாக இருந்தார்கள், அது சமயத்தில், ஆளவந்தார்கள்!

பத்திரிகைகளின் கருத்துக்கு மதிப்பளிக்கும் வழக்கந்தான், மந்திரிகளின் இரத்தத்திலேயே கிடையாதே! பத்திரிகைகள்மீது பழிபோட்டுப்பேசும் குமாரசாமியாரைக் கேட்கிறோம், எந்தப் பத்திரிகையாவது, நகர மக்களுக்கு மட்டும் சட்டப்படியான உணவுப் பங்கீட்டை அமுல் நடத்துங்கள், கிராம மக்களை இயற்கையின் கருணைக்கு விட்டு விடுங்கள் என்று சர்க்காருக்கு ஆலோசனை கூறியதுண்டா என்று உண்மை பேசுவதுதான் ஒழுக்கத்திற்கெல்லாம் தலையாயது என்ற கருத்திலே குமாரசாமியாருக்கு ஆழ்ந்தபற்றுதல் இருக்குமானால், அவர் துணிந்து கூறமாட்டார், 'ஆம்! பத்திரிகைகள்தான் கிராம ரேஷனை எடுக்க வேண்டும் என்று தீவிர கிளர்ச்சி செய்தன' என்று!

கிராமப் பங்கீடு எடுக்கப்பட்டதற்குக் காரணம், வெளிநாட்டிலிருந்து இத்துணைக் கண்டத்துக்குத் தேவையான உணவுப்பொருள்கள் வேண்டும் பொழுது இறக்குமதியாகாததேயாகும். இறக்குமதி யாகாததும் வெளிநாடுகளில் நமக்குத் தேவையான உணவுப் பொருட்களைக் காலாகாலத்தில் கொள்முதல் செய்ய டெல்லி சர்க்கார் தவறிவிட்டதேயாகும். காலாகாலத்தில் கொள்முதல் செய்யத் தவறிவிட்டதற்கும் காரணம், டெல்லி சர்க்காரின் அதிக உணவு உற்பத்தி திட்டமும், சுயதேவை பூர்த்தி என்ற பேதமை புத்தியும், மக்களை அலட்சியப்படுத்திய ஆணவப் போக்குமேயாகும்.

பயிர் செய்யவேண்டிய பருவத்தில் படுத்து உறங்கிவிட்டு, அறுவடை காலத்தில் அரிவாளை எடுத்துச் சென்ற அறிவிலியைப்போல், மற்ற நாட்டவர்கள் வெளிநாடுகளில் உணவு தானியக் கொள்முதல் செய்து முடித்துவிட்டப்பிறகு, மிச்சம் மீதி ஏதாவது கிடைக்குமா என்று எந்தெந்த நாட்டிலோ சுற்றித் திரிந்தது டெல்லி சர்க்கார். இந்தக் காலந்தவறிய உணவு வேட்டையில் கிடைத்ததும் கொஞ்சம்—அதற்காகக் கொடுத்தவிலையும் கூடுதல்—ஒன்றுக்கு இரண்டு! டெல்லி சர்க்காரின் ஆணவத்திற்கும் அலட்சியத்துக்கும் பொது மக்கள் கொடுத்த, கொடுத்துவரும் விலை, கால்வயிறு அரைவயிறு, பட்டினிச் சாவு!

டெல்லி சர்க்காரின் பின்புத்தியின் விளைவாகத்தான் கிராம ரேஷன் கைவிடப்பட்டு, நகர ரேஷனிலும் தடுமாற்றம் ஏற்பட்டு, ஆறு அவுன்ஸ் அரிசி என்ற அவலம் இருந்துவருகிறது. இந்த ஆறு அவுன்சாவது நீடித்து இருக்குமா என்பதும் சந்தேகம். அதுவும் ஆட்டம் கொடுத்த வண்ணம் இருக்கிறது!

டெல்லி சர்க்கார் தீர்மானித்தனர் கிராம ரேஷனை எடுத்து விடுவதென்றும் அத்தீர்மானப்படி ஆடித்தீர வேண்டிய நிர்பந்தத்தில் உள்ள குமாரசாமியாரும் ஆடித்தீர்த்துவிட்டார். அதாவது கிராம ரேஷன் டெல்லி சர்க்காரின் விருப்பப்படி எடுக்கப்பட்டுவிட்டது சென்னை சர்க்காரால், இது தான் உண்மை.

கிராமரேஷனை கைவிட்டாக வேண்டும் என்று டெல்லி கட்டளையிட்டுவிட்ட பின்னர், குமாரசாமியார் நினைத்தால்கூட, கிராமரேஷனை கைவிடாமல் இருந்திருக்க முடியாது. கிராம ரேஷனை எடுக்கமாட்டேன் என்று குமாரசாமியார் பிடிவாதம் பேசி இருந்தால், கண்டிப்பாக இராஜபாளையத்தார் அரசியல் துறவு மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத்தான் வந்திருப்பார்!

உண்மை இவ்வாறு இருக்க குமாரசாமியார் பத்திரிகைகள் மீது பழி சுமத்துவது ஆகுமா? அடுக்குமா?

கனம் முன்ஷி எஜமான்—குமாரசாமியார் ஏவலாளி! முன்ஷியார் கட்டளை இடுவார்! குமாரசாமியார் கீழ்படிந்தாக வேண்டும்! முன்ஷியார் தாசில்தார்! குமாரசாமியார் வாயற்படியிலே காத்துக் கிடக்க வேண்டிய 'டபேதார்'!

உண்மை இதுதான். இன்றுள்ள அரசியல் கூட்டத்திலே முன்ஷியாருக்கும் குமாரசாமியாருக்கும் உள்ள அதிகாரப் பிரிவினை இவ்வளவுதான்! இவ்வுண்மையை குமாரசாமியார் நன்கு உணர்ந்திருக்கிறார் நம்மைப்போலவே. உண்மையைத் தெரிந்திருக்கின்ற காரணத்தால் தான், சிற்சில சமயங்களில்டெல்லியைமுறைத்துப்பார்க்கிறார். குட்டு கிடைத்த உடனே, கோமாளி ஆகிறார் குமாரசாமியார்! விபரீத வாதங்களை வெளியிடும் விசித்திர சித்தர் ஆகிறார். அவருடைய விசித்திர சித்து, விபரீதவாதம் மக்களுக்கு வேதனை உருவில் உலாவுகிறது. அவருக்குப் பொழுது போக்கு! நமக்கெல்லாம் உயிர்வாதை!

## எங்கள் நன்றி

12—9—51 அன்று சென்னையில் நடைபெற்ற எங்கள் திருமண விழாவில் வந்து கலந்துகொண்டு எங்கட்குச் சிறந்த அறிவுரை வழங்கிய திராவிடர் இயக்கத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்,

விழாவில் சொற்பொழிவாற்றிய பல்வேறு தலைவர்கள்—தளபதிகள்,

இடநெருக்கடி அதிகமாக இருந்தும் எங்கள்பால இருந்த அன்பு காரணமாக அதனைப் பொருட்படுத்தாமல் கடைசி வரையில் இருந்து விழாவைச் சிறப்பித்துத் தந்த பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள்,

விழாவில் நேரில் வந்து கலந்துகொள்ள இயலாமையைத் தெரிவித்தும், எங்களை மனமார வாழ்த்தியும் தந்திகள் அல்லது கடிதங்கள் அனுப்பியுள்ள நூற்றுக்கணக்கான திராவிடப் பெருமக்கள்,

திருமணம் இனிது நிறைவேறுவதற்காக ஒரு வார காலத்திற்குமேல் தம்முடைய சொந்த வேலையையும் மறந்து ஓயாது உழைத்த எங்கள் அருமை நண்பர்—சென்னைத் தோழமைக் கழகத் தலைவர்—ஏ. ஆர். சேஷாசலம் அவர்கள்,

எங்கட்குத் தேவையான பல உதவிகளை அன்புடன் செய்துதவிய சென்னை "ஆரம்பக் கல்வி" ஆசிரியர்—தோழர் பி. வீராகவன் அவர்கள்,

எங்கள் இருவரின் வாழ்க்கைகளை ஒன்றாக இணைத்து வைத்த சென்னை நுங்கம் பாக்கம் திராவிட முன்னேற்றக் கழக பிரபலஸ்தர் தோழர் பாலசுந்தரனார் அவர்கள்,

மற்றும் தேவையான உதவிகள் பலவும் மதறாஸ் பளையகாட் கம்பெனி மூலம் செய்து தந்த திருவாரூர் நகரசபைத் தலைவர் திரு. தி. நா. சபாபதி முதலியார் அவர்கள்

ஆகிய அனைவருக்கும் எங்கள் மனமுவந்த நன்றியை, தனித்தனியே தெரிவிக்க இயலாமை கருதி, இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். அனைவருக்கும் எங்கள் வணக்கம்,

இங்ஙனம்,

சுந்தராம்பாள்,
இளஞ்செழியன்.

## மாநில மாநாடு

மாநில மாநாட்டை சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் நடத்த அனுமதி கிடைத்துள்ளது.

மாவட்டப் பகுதி பணத்தை இம்மாத இறுதிக்குள்ளே அளித்து விடுவதாக மாவட்டச் செயலாளர்கள் உறுதி தந்துள்ளார்கள்.

பொதுச் செயலாளர் நிதி நிலைமையை நேரில் கவனிக்க சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார்.

நெல்லை, திருச்சி மாவட்டங்களில் வசூலை எளிதாகவும், துரிதமாகவும் முடிக்க கருணாநிதியின் 'வாழ முடியாதவர்கள்' நாடகம் நடத்தப்பட விருக்கிறது.

பாதி தொகையளித்த மாவட்டங்களில், மீதிதொகையை சேர்த்துக் கொண்டுள்ளனர்:

காஞ்சியில் நிதி சேர்த்துவிட்டது என்று அறிவித்து விட்டனர்.

விரைவில் மத்திய செயற்குழு கூடி மாநாட்டின் மற்றைய வேலைகளைத் தொடங்கப் போகிறது. மாநாட்டுப் பணிகளை ஏற்று நடத்தும் வரவேற்புக் குழு, தலைவர், திறப்பாளர் இவர்களைத் தெரிந்தெடுத்து, தேதியும் நிர்ணயிக்க இருக்கிறது.

மாநாட்டில் பகுத்தறிவுக் கண்காட்சி முக்கிய இடம் வகிக்கப் போகிறது.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியும் அவரது குழுவினரும் நடிக்கும் நாடகங்கள் மட்டுமல்லாமல், தெலுங்கு நாடகம் ஒன்றும், பெண்களே முழுப்பங்கேற்று நடத்தும் நாடகம் ஒன்றும், இன்னும் பல முக்கிய கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

சிங்கத் திராவிடரே செயலாற்றும் செம்மல்களே! சென்னையில் கூடும் மாநில மாநாடு காண வாரீர்! வாரீர்!

தீரரே! வீரரே! சென்னைக்கு வாரீர்! வெற்றிப்பாசறை அமைப்போம்! வீரகீதம் பாடிடுவோம்!

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசை, உருக்கம் ஆகியவற்றைத் தன் சொற்களிலே குழைத்துப் பேசிய இன்பச் சித்திரம்!—என் கண்கள் முன்னால் பன்முறை தோன்றிக்கொண்டிருந்தது!

என் அருகில் நிறை கர்ப்பிணியாகப் படுத்துறங்கிக் கொண்டிருந்த வேணியின் அழகு முகத்தைப் பார்த்தேன். புன்முறுவல் புரிந்தேன்!...

"ஓவியர் இன்பதாசரின் ஓவியக் கலையைக் கண்டு இரசித்து அவர் தாசராகியுள்ள பலருள் நானும் ஒருவன்! அவர் என் நாட்டைச் சேர்ந்தவராயில்லாததால் நான் வருந்தவில்லை. ஆம், கலைஞர்கள் எல்லாருக்கும், எல்லா நாடுகளுக்கும் உரியவர்களல்லவா?....அவரை எங்கள் நாடு வரவேற்கிறது!..... அழகு ஓவியங்கள் பல அவர் கையால் தீட்டப்பட்டு என் அரண்மனைச் சுவர்களை அலங்கரிக்க வேண்டுமென்ற ஆசை கொண்டுள்ளேன். எனவே ஓவியர் இன்பதாசனைச் சில நாட்களுக்கு எங்கள் நாட்டிற்கு அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன்!

நன்றி.

பரந்தாமன்......"

பாலை நாட்டுப் புரவலர் பரந்தாமன் முல்லை மன்னர் முத்துவீரருக்கு எழுதியிருந்த மடல்! ஆம். என் உள்ளக் கடலிலே மகிழ்ச்சி அலைகளை எழுப்பச் செய்த இனிய முடங்கல் இது!......இதை அன்று காலை அரசவையில் மன்னர்படித்த காட்சியும் என் முன்னே தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது!

"பாலை நாட்டுப் புரவலர் பரந்தாமனார் நம் நாட்டு ஓவியர்திலகம் இன்பதாசனைத் தன் நாட்டிற்குச் சில நாட்களுக்கு அழைக்கிறார்...."—இது மன்னர்!

"ராஜன்! இது முல்லை நாட்டிற்கே மாபெரும் புகழ்ச்சி!..."—இது நஞ்சநாதன்!

"ஆம், கலைஞன் எல்லோருக்கும், எல்லா நாடுகளுக்கும் உரியவன் தான்!..."—இது விக்கிரமன்.

"ஓவியர் இன்பதாசன் அகிலம் புகழவேண்டிய ஓவியர்!...எனவே அவர் பாலைக்கேகினும் முல்லைக்குச் சிறப்புண்டு!..."—இது மற்றொரு மந்திரியார்.

"இன்பதாசா, உன் எண்ணம்?—"—இது மன்னர்.

"அரசே! கலைஞன் எல்லா நாடுகளுக்கும் உரியவன்தான்! தாங்கள் அனுமதியளித்தால் நான் தங்களிடம் பிரியாவிடை பெறவேண்டும், பாலைக்கு!..."—இது நான்.

"நான் முழு அனுமதியும் தருகிறேன், இன்பதாசா!..."—மன்னர்.

இந்தச் சொற்கள் ஒவ்வொன்றும் அன்றிரவு என் காதுகளில் விடாது ஒலித்துக்கொண்டிருந்தன!

பெருமையும் பூரிப்பும் என்னைப் பற்றி அணைத்துக்கொண்டிருந்தன. கண்ணயர முடியாதிருந்தேன்! நிறைகர்ப்பிணியாக இருந்த என் ஆசை மனைவியையும், அன்பு நண்பராகிய மன்னரையும் பிரிந்து சின்னாட்களுக்கு இருக்கவேண்டுமே என்பதை எண்ணியபொழுது சிறிது சஞ்சலம் ஏற்பட்டது என் உள்ளத்தில்!...வேணியின் முகத்தைப் பார்த்தேன்! சாந்தம் வழிந்துகொண்டிருந்தது! அவள் அயர்ந்துறங்கிக் கொண்டிருந்தாள்! கட்டி ஒரு முத்தம் தந்தேன் என் கண்மணியாளுக்கு!

"அத்தான், நீங்கள் தூங்கவில்லையா?..." எனக் கேட்டுக் கொண்டே எழுந்தாள் அவள்.

"இல்லை வேணி! உன்னைச் சின்னாட்களுக்குப் பிரிந்திருக்கவேண்டுமே, என் அழகுக்குழந்தை பிறக்கும்பொழுது நான் இங்கு இருக்க முடியாதே என்பவைகளை நினைத்து..."

"என்னை முத்தமிட்டீர்களா?..."

"கண்ணே! இன்னும் சிறிது காலத்திற்கு உன் கன்னங்களைக் காண முடியாதே!..."

"நானுங்கூட உங்கள் அழகுதரங்களைச் சின்னாட்களுக்குக் காண முடியாதே!..."

"வேணி! நானில்லாதபொழுது நம் அருமைக்குழந்தை உனக்கு மகிழ்ச்சியூட்டிக் கொண்டிருக்கும்!—தன் மழலை மொழியால்! அதன் அழகுதரங்களைப் பார்த்துப் பரவசப்பட்டுக் கொண்டிரு கண்ணே!..."

"அக்குழந்தை ஆண்குழந்தையாக இருந்தால்..."

"உன் ஆனந்தத்திற்கு அளவிருக்காதல்லவா?..."

"அதுமட்டுமல்ல அத்தான்!... 'ஈன்றபொழுதினும் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டதாய்!' என்பது நம் மறைமொழியல்லவா?..."

அன்றிரவு இப்படி வெகுநேரமாக நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம், பரிவின்பால்!...

## ஒன்பதாம் பகுதி
## மகிழ்ச்சி! மகிழ்ச்சி!!

இரண்டு நாட்கள் கழிந்தன.

அன்று காலை அரசவை கூடிற்று. யாவர் முகத்திலும் மகிழ்ச்சிக்குறிகள்! மன்னர் என்னைப்பற்றி வெகுவாகப் பாராட்டிப் பேசினார். "ஒப்பற்ற ஓவியர்; உன்னதக் கலைஞர்; முல்லைநாடு செய்த தவப்பயனாகப் பிறந்தவர்" என்றெல்லாம் வாழ்த்திப் பேசினார். மந்திரி பிரதானியரும் பேசினார்கள். என் பிரயாணத்திற்கு எல்லாம் ஆயத்தமாகிவிட்டன! பூசுரன் என்னை அரைமணி நேரம் ஆசிர்வதித்தான்! நான் புறப்பட ஆயத்தமானேன்!

கண்களில் கண்ணீர் கலங்க என் வேணியிடமும் வேந்தரிடமும் விடைபெற்றுக்கொண்டேன்! பல்லக்கில் ஏறினேன். வீரர் பலர் குதிரைகள் மீதேறி எனக்கு முன் சென்றனர். மக்கள், "ஓவியர்

(3-ம் பக்கம் பார்க்க)

"போர்வாள்"
சந்தா விவரம்

★

| | |
|---|---|
| ஓராண்டு | ரூ. 6 8 0 |
| 6 மாதம் | ரூ. 3 4 0 |

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Econs)